DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 186 /2018

Deposition of witness for: PW -3

Name :Periyasami Father/Husband Name: Sangili

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 30.03.2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் பொட்டப்பனையூரில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 6 அல்லது 7 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 08 மணியளவில் கருங்காலக்குடி அய்யங்கார் பேக்கரி அருகில் வைத்து போலீசார் வந்து படம் வரைந்து எழுதி படித்துக்காண்பித்து கையெழுத்து கேட்டதன்பேரில் நானும் மனோகரன் என்பவரும் மனோகரன் முதலிலும் பின்னர் நானும் கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்

குறுக்கு விசாரணை:

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் படிக்கவில்லை. வழக்கில் இறந்தவர் என் உறவினர் என்றால் எனது ஊர்க்காரர். அவர் என் உறவினர் என்றால் சரியல்ல. என்னுடன் கையெழுத்து செய்த மனோகரன் என் உறவினர் என்றால் இல்லை, எங்கள் ஊரை சேர்ந்தவர். இந்த வழக்கின் சாட்சிகள் என் உறவினர் மற்றும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். என்னிடம் போலீசார் எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் கருங்காலக்குடியில் வைத்து. கருங்காலக்குடியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் அய்யங்கார் பேக்கரி அருகே. ரோட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள அய்யங்கார் பேக்கரியிலா அல்லது வலதுபுறம் உள்ள அய்யங்கார் பேக்கரியிலா என்றால் வலதுபுறமுள்ள அய்யங்கார் பேக்கரில் வைத்து விசாரித்தனர். என்னிடம் விசாரிக்கும்போது எங்கள் ஊர்க்காரர்கள் எத்தனைபேர்இருந்தோம் என்றால் நானும்

மனோகரனும்தான் இருந்தோம். என்னை விசாரித்துவிட்டு ஒரு பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் எனக்கு படித்து காண்பித்துவிட்டுதான் கையெழுத்து வாங்கினார்கள். அதில் எனக்கு என்ன படித்துகாண்பிக்கப்பட்டது என்று என்னால் சொல்ல இயலுமா என்றால் நினைவில் இல்லை. என்னிடம் ஒரு மணிநேரம் விசாரித்திருப்பார்களா என்றால் அரைமணி நேரம் விசாரித்தனர். நான் கருங்காலக்குடிக்கே செல்லவில்லை என்றாலும், என்னிடம் போலீசார் காவல்நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து வாங்கினார்கள் என்றாலும், இறந்தநபர் என் ஊர்க்காரர் என்பதாலும் அவருக்கு இழப்பீடு வழக்கில் பணம் வாங்குவதற்காக அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் சம்பவ நடந்ததற்கான சாத்தியகூறுகள் எதையும் பார்க்கவில்லை என்றால் பார்க்கவில்லை, படம் வரைந்ததை மட்டும்தான் பார்த்தேன், பேருந்தை காவல் நிலையத்தில் பார்த்தேன். சம்பவ இடத்தில் வேறு தடயங்கள் எதையும் பார்க்கவில்லை என்றால் சரிதான்.